பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

23 07 2026 6 45

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வளர்ச்சியடைந்த இந்தியாவை கட்டமைப்பதற்கான கனவு மக்கள் இயக்கமாக மாற வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. தமிழகத்தில் தூர்தர்ஷன் மற்றும் ஆகாஷ்வாணி சேவைகளை விரிவுபடுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. எல்லைதாண்டி மீன் பிடித்ததாக ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 9 மீனவர்களை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்துள்ளனர்.

4. மாநிலத்தில் மின் கட்டண குளறுபடிகளைக் களைய Smart Meter திட்டத்தை உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்று மாநில அரசை பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

5. சீன ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்யா சென், காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

**<<<<<>>>>>**

வளர்ச்சியடைந்த இந்தியாவை கட்டமைப்பதற்கான கனவு மக்கள் இயக்கமாக மாற வேண்டும் என்றும், இந்த தொலைநோக்குப் பார்வையின் அடித்தளத்தை இளைஞர்கள் உருவாக்க வேண்டும் என்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற உயர்நிலைக் கூட்டத்தில் வளர்ச்சியடைந்த இந்தியாவின் இலக்குகளை நோக்கிய ஊரகப் பகுதி வளர்ச்சி, வேளாண்மை, சமூகநலன் மற்றும் அது சார்ந்த துறைகளின் முன்னேற்றம் குறித்து துறை செயலாளர்களுடன் ஆய்வு நடத்தினார்.

மக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட சீர்திருத்தங்கள் தேவையான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

சீர்திருத்தங்களின் நோக்கம் அரசின் செயல்பாட்டை மேம்படுத்துவது மட்டுமின்றி, வளர்ச்சியடைந்த நாடாக மாறுவதற்கான நாட்டின் பயணத்தை விரைவுபடுத்துவதாகும் என்று அவர் கூறினார்.

இளைஞர்களிடையே நிலவும் போதைப்பொருள் உபயோக பிரச்சினையைக் களைவதன் அவசியம் குறித்தும் பிரதமர் வலியுறுத்தினார்.

விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு ஒருங்கிணைந்த அணுகுமுறையைக் கடைபிடிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் அவர் சுட்டிக்காட்டினார்.

விளையாட்டுத் துறையில் நாட்டை உலகளாவிய மையமாக திகழச் செய்வதற்கு சர்வதேச அளவிலான முக்கிய விளையாட்டுகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அவர் கூறினார்.

அத்துறையில் தொழில்நுட்பத்தை ஊக்குவித்து புத்தொழில் நிறுவனங்களை வளர்ப்பதன் முக்கியத்துவம் குறித்தும் பிரதமர் வலியுறுத்தினார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் தூர்தர்ஷன் மற்றும் ஆகாஷ்வாணி சேவைகளை விரிவுபடுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், ஊரகப் பகுதிகள், மலைப்பாங்கான பகுதிகள், கடலோர மற்றும் எல்லைப் பகுதிகளில் ஒலிபரப்பு சார்ந்த பிரச்சினைகளைக் களைவதற்கு ட்ரான்ஸ்மீட்டர்களை தரம் உயர்த்தும் பணிகள் நடைபெற்று வருவதாகத் தெரிவித்தார்.

FM சேவைகளை விரிவாக்கம் செய்தல், நவீன டிஜிட்டல் சாதனங்களைப் பொருத்துதல் போன்ற பணிகளும் நடைபெற்று வருவதாக டாக்டர் எல். முருகன் கூறினார்.

<<<<<>>>>>

தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் பணியமர்த்தப்படுவது முற்றிலும் தடுக்கப்பட வேண்டும் என்று மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. முகமது பர்வேஸ் கூறியுள்ளார்.

சென்னை கிண்டியில் உள்ள தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலகத்தில் அலுவலர்களின் திறனாய்வுக் கூட்டத்தில் அவர் கலந்துகொண்டார்.

அபாயகரமான தொழில் மற்றும் செயல்முறைகளில் வளர் இளம்பருவத்தினர் பணிபுரிவதைத் தடுக்க சீரிய முறையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அலுவர்களை அவர் கேட்டுக்கொண்டார்.

தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமானப் பணியிடங்களில் மேற்கொள்ளப்படும் ஆய்வின்போது தொழிலாளர்களின் பாதுகாப்பு, உடல் நலன், அவர்களுக்கான வசதிகளில் கவனம் செலுத்தி உறுதி செய்ய வேண்டும் என்று திரு. முகமது பர்வேஸ் அறிவுறுத்தியதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>>

எல்லைதாண்டி மீன் பிடித்ததாக ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 9 மீனவர்களை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்துள்ளனர்.

ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து சென்ற அவர்களுடைய விசைப்படகையும் பறிமுதல் செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte – Karthikeyan – 48 Sec)

<<<<<>>>>>

மாநிலத்தில் மின் கட்டண குளறுபடிகளைக் களைய Smart Meter திட்டத்தை உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், வீடுகளுக்கான மின் நுகர்வை கணக்கெடுப்பதில் ஏற்படும் குளறுபடிகளாலும், அலட்சியப் போக்கினாலும் மக்கள் கடுமையான மின் கட்டண சுமைக்கு ஆளாகியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

எனவே Smart Meter திட்டத்தை அமல்படுத்தினால் மட்டுமே மின்நுகர்வை துல்லியமாக கணக்கிட முடியும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் நடைபெற்று வரும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்போது மக்கள் சரியான தகவல்களை வழங்குமாறு மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநர் திரு. சுந்தரேஷ் பாபு கேட்டுக்கொண்டுள்ளார்.

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனைத் தெரிவித்தார்.

(Voice Byte – Sundaresh Babu – 60 Sec)

<<<<<>>>>>

*இருவரிச் செய்திகள்*

காங்கோவில் எபோலா வைரஸ் தொற்று காரணமாக இதுவரை ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

-------------

கென்யாவில் எபோலா நோய்த்தொற்றைத் தடுப்பதற்காக இந்தியாவின் சார்பில் நான்கரை டன் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

-------------

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு ருமேனியாவில் இன்று முதல் இரண்டு நாள் பயணம் மேற்கொள்கிறார்.

-------------

ஃபிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், கனடா மற்றும் நியூசிலாந்து வெளியுறவு அமைச்சர்களை சந்தித்துப் பேசினார்.

-------------

நித்தி ஆயோக் தலைமைச் செயல் அதிகாரியாக மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. அனுராக் ஜெயின் நியமிக்கப்பட்டுள்ளார்.

-------------

தஞ்சாவூரில் அதிநவீன வசதிகளுடன் கூடிய புதிய ஆதார் சேவை மையத்தை ஆட்சியர் திருமதி ரேவதி தொடங்கி வைத்தார்.

-------------

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தில் அளிக்கப்பட்டு வரும் மருத்துவ சேவைகள் குறித்து ஆட்சியர் திரு. மதுபாலன் ஆய்வு மேற்கொண்டார்.

-------------

கள்ளக்குறிச்சி மாவட்ட சின்ன சேலம் பேரூராட்சியில் லஞ்ச ஒழிப்பு காவல் துறையினர் நடத்திய சோதனையில் மின்னணுப பணப் பரிவர்த்தனை மூலம் கணக்கில் வராத 8 லட்சம் ரூபாய் பரிவர்த்தனை செய்யப்பட்டது கண்டறியப்பட்டது.

-------------

சென்னை - ராமேஸ்வரம் இடையேயான வந்தேபாரத் ரயில் சேவை செப்டம்பர் மாதம் முதல் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே பொதுமேலாளர் திரு. ஆர்.என். சிங் தெரிவித்துள்ளார்.

-------------

பெருநகர சென்னை மாநகராட்சியில் திட்ட அனுமதி கோரல் தொடர்பான விண்ணப்பத்தின் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அலுவலர்களை இணை ஆணையர் திரு. சரவணன் அறிவுறுத்தியுள்ளார்.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

சீன ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்யா சென், காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அவர், 22-20, 15-21, 21-14 என்ற செட் கணக்கில் ஜப்பானின் Yushi Tanaka-வை வென்றார்.

---------------

இந்தியா - ஜிம்பாப்வே அணிகளுக்கு இடையேயான முதலாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

ஹராரேயில் நடைபெற உள்ள இப்போட்டி மாலை மணி 4.30க்கு தொடங்குகிறது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இத்தொடரின் இரண்டாவது போட்டி நாளை மறுநாளும், மூன்றாவது மற்றும் இறுதிப் போட்டி வரும் 26ஆம் தேதியும் நடைபெற உள்ளது.

------------

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - ஸ்வீடனின் Andre Goransson இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<<The End>>>>>